# இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

# பதவி வெற்றிடங்கள்

## ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவரகம்

**இலங்கை ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவரகத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்காக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) (01 வெற்றிடம்)

**(1) கடமை விபரம்**

ஒவ்வொரு விளையாட்டினதும் ஒழுக்கத்தைப் பேணுவதற்காக, அபாயங்களைத் தனித்தனியாக மதிப்பிடுவதற்கு ஆண்டு மற்றும் காலாண்டு ஊக்கமருந்து பரிசோதனைத் திட்டங்களைத் தயாரித்தல், விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான அவசியமான விழிப்புணர்வு கல்வித் திட்டங்களைத் திட்டமிடுதல், ஊக்கமருந்து சோதனைகளின் முடிவுகள் சாதகமாக வந்த பிறகு ஆவணங்களை பெறுபேறுகள் முகாமைத்துவப் பிரிவிடம் ஒப்படைத்து கண்காணித்தல், ஊக்கமருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகள் மற்றும் ஊக்கமருந்து கட்டுப்பாட்டு உதவியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல், சிகிச்சை பயன்பாட்டு விலக்கு தொடர்பான செயல்பாடுகளைக் கண்காணித்து, நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்காகக் கீழ்நிலை ஊழியர்களை வழிநடத்துதல், இயக்குநர் குழுவால் எடுக்கப்பட்ட முடிவுகளை முறையாகச் செயல்படுத்துதல், நிறுவனத்தை நிறுவுவது தொடர்பான சட்டத்தால் ஒதுக்கப்பட்ட பணிகளையும், பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் சிரேஷ்ட முகாமைத்துவப் பணிகளையும் செயல்படுத்துதல்.

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

2.1 பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) பதவிக்கு வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்

(அ) **கல்வித் தகைமைகள்**

மருத்துவம், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் போன்ற விடயத்துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு (Master) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

(ஆ) **அனுபவம்**

மற்றும் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்டச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 'முகாமைத்துவ மட்டப்' பதவியொன்றில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

2.2 பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை) பதவிக்கு உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

02. 'முகாமைத்துவ' (MM) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (3) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

03. இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல்.

**(3) சம்பள அளவு**

HM-1-1 2025 (ரூபா 140,640 - 15×4,100 202,140 (01/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்கும்)

**(4) வயதெல்லை:**

35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**(5) ஆட்சேர்க்கும் முறை**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் பிரசித்த விளம்பரம் பிரசுரிக்கப்படுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் பின்வரும் மாற்றுவழிகள் ஒன்றில் தகுதி மாற்றுவழியின் ஊடாக ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

(a) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

(b) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

### பணிப்பாளர் (வலியுறுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்) (01 வெற்றிடம்)

**(1) கடமை விபரம்**

நிறுவனத்தை நிறுவுதலுக்கு இயைபான சட்டங்கள் உட்பட இயைபுடைய ஏனைய அனைத்து சட்ட ஒழுங்குவிதிகளை விளங்கப்படுத்துதல் மற்றும் செயற்படுத்துதல், தடை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளல், அந்த நிறுவனங்களுடன் இணைந்து உரிய காலத்தில் சட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தகவல் நாளதுதரவேற்றம் செய்தல் மற்றும் அந்த விதிகளை இலங்கையில் கடைப்பிடித்தல், தடை செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் இயைபுடைய எமது நாட்டின் அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுதல், நிறுவனத்தை நிறுவுதற்கு இயைபான சட்டத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு சாட்டப்படும் கடமைகள் மற்றும் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் சாட்டப்படும் சிரேஷ்ட முகாமைத்துவக் கடமைகளை நிறைவேற்றுதல்

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

2.1 பணிப்பாளர் (வலியுறுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்) பதவிக்கு வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்

**(அ) கல்வித் தகைமைகள்**

சட்டம் மற்றும் குற்றவியல் போன்ற விடயத்துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு (Master) பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

**(ஆ) அனுபவம்**

மற்றும் அரசாங்கம், அரச கூட்டுத்தாபனம், சபை, நியதிகள் சட்டச் சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 'முகாமைத்துவ மட்டப்' பதவியொன்றில் இயைபுடைய துறையில் குறைந்தபட்சம் பதின்மூன்று (13) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்

2.2 பணிப்பாளர் (வலியுறுத்துதல் மற்றும் செயற்படுத்துதல்)) பதவிக்கு உள்வாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

02. 'முகாமைத்துவ' (MM) சேவை வகுதியில் 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் மூன்று (3) வருட காலம் இயைபுடைய விடயத்துறையில் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

மற்றும்

03. இரண்டாம் வினைத்திறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல்.

**(3) சம்பள அளவு**

HM-1-1 2025 (ரூபா 140,640 - 15×4,100 202,140 (01/2025ஆம் இலக்க முகாமைத்துவச் சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் உள்ளடங்கும்)

**(4) வயதெல்லை:**

35 வயதுக்குக் குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**(5) ஆட்சேர்க்கும் முறை**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் பிரசித்த விளம்பரம் பிரசுரிக்கப்படுவதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் பின்வரும் மாற்றுவழிகள் ஒன்றில் தகுதி மாற்றுவழியின் ஊடாக ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

(a) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

(b) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

### சாரதி (02 வெற்றிடங்கள்)

**(1) கடமை விபரம்**

வாகனம் தொடர்பில் பொறுப்பு கூறுதல் மற்றும் முறையான வகையில் போக்குவரத்து நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்கு உதவுதல், கடமைகளுக்கான போக்குவரத்து வசதிகளைத் திட்டமிடுதல், வாகனத்தின் ஓடும் நிலைமையை பொருத்தமான வகையில் பேணுவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல், பயண ஓட்டக் குறிப்புகளை புத்தகத்தில் எழுதுதல் மற்றும் பெற்றுக்கொண்ட எரிபொருள் அளவை குறிப்பிட்டுக் காட்டுதல்.

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

***வெளிவாரி விண்ணப்பதாரிகள்:***

**சாரதி**

**2.1.1 கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**2.1.2 தேர்ச்சி:**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கன ரக வாகனங்கள் செலுத்துவதற்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் (உத்தேச தேர்ச்சித் தன்மையை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்) மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***உள்வாரி விண்ணப்பதாரிகள்:***

**சாரதி**

மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்கள் செலுத்துவதற்கான உரிமத்தைப் பெற்றிருத்தல் மற்றும் சாரதி உரிமத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் வாகனம் செலுத்துதல் தொடர்பில் மூன்று (03) வருடகால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

ஆரம்ப தேர்ச்சியற்ற (PL 1) சேவை வகுதியில் மூன்று (03) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**(3) சம்பள அளவு**

PL 3 2025 - ரூபா (43,280 - 10× 490 - 10 × 540 - 10×590 -12×630 - 67,040)

**(4) வயதெல்லை:**

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

**(5) ஆட்சேர்க்கும் முறை**

பிரசித்த விளம்பரம் அல்லது தேசிய பத்திரிகை மூலம் விண்ணப்பம் கோரப்பட்டதன் பின் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்சார்ந்த பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

(a) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

(b) கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்

**(6) மேற்கூறிய பதவிகளுக்கான பொதுவான நிபந்தனைகள்:**

- **ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்:** (அபேட்சகரினால் 8% மற்றும் நிறுவனத்தினால் 12% மும் ஊழியர் சேமலாப நிதிக்கு மற்றும் 3%ம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யப்படும்)
- கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் பிரகாரம் குறும் பட்டியலிடப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

**(7) ஏனையவை:**

சகல விண்ணப்பதாரிகளும்

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்கு ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கும் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**(8) விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கும் முறை:**

- விண்ணப்பதாரியினால் சான்றிதழ்கள், நன்னடத்தைச் சான்றிதழ்களின் பிரதிகள், உறவினரல்லாத சான்றுபகர்வோர் இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களுடன் தமது சுய தரவுத் தகவல்களை உள்ளடக்கி தம்மாலேயே தயாரித்துக் கொண்ட A4 அளவிலான விண்ணப்பப் படிவத்தை 2026-06-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பணிப்பாளர் நாயகம், ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவரகம், 363/12, சுகததாச ஸ்டேடியம் - புளொக் டி, விளையாட்டுக் கட்டிடத் தொகுதி வாகனத் தரிப்பிட வீதி, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-14 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / நியதிச் சட்டசபைகளில் கடமையாற்றுவோர் தமது விண்ணப்பங்களை தமக்குரிய நிறுவனங்களின் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- அவ்வாறல்லாத மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள், ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- இது தொடர்பிலான அழுத்தங்களைப் பிரயோகித்தல் தகுதியீனமாகும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவரகம்.**
**011-2328366**